


அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி முதல்நிலைப் பேரூராட்சி, வார்டு எண் 8 நடுவீதியில் நேற்று (31.03.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.1.52 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய வளர்ச்சித் திட்டத்திற்கான பணிகளைத் தொடங்கி வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, காடையாம்பட்டி பேரூராட்சித்தலைவர் ரா.குமார், செயல் அலுவலர் திருமதி ந.பொற்கொடி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### சேலம் – ஓமலூர் ஒன்றியத்தில்

# ரூ.3.14 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள்!

## அமைச்சர் இரா.ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம்,ஏப்.1-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் காடையாம் பட்டி முதல்நிலைப் பேரூராட்சிப் பகுதிகளில் இன்று (31.03.2025) நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., முன்னிலையில் ரூ.3.14 கோடி மதிப்பீட்டிலான 17 புதிய வளர்ச்சித் திட்டத்திற்கான பணிகளைத் தொடங்கி வைத்தார்கள். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் மகளிருக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அதேபோன்று, பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், கிராமப்புறப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில் புதிய சாலைகள், பாலங்கள் அமைத்தல், குடிநீர் இணைப்புகள் வழங்குதல், கழிவுநீர் கால்வாய் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகளுக்குத் தேவையான நிதிகளை ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறத்தில் உள்ள விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைத்துத்தரப்பினரின் முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இத்தகைய திட்டங்களை பொது மக்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தவகையில், இன்றையதினம் சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டமேட்டுப்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சார்பில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அண்ணாநகர் மற்றும் ஆர்.சி. செட்டிப்பட்டி பகுதிகளில் புதிய கான்கிரீட் சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகளுக்கும், 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா நகர் மற்றும் பெருமாள் கோவில் பகுதியில் புதிய கான்கிரீட் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகளுக்கும் என மொத்தம் ரூ.1.62 கோடி மதிப்பீட்டிலான 12 புதிய வளர்ச்சித் திட்டத்திற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதனைத்தொடர்ந்து, காடையாம்பட்டி முதல்நிலைப் பேரூராட்சி, வார்டு எண் 8 நடுவீதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 15வது நிதிக்குழு மூலம் ரூ.63.21 இலட்சம் மதிப்பீட்டில் வடிகால் வசதி, ஆழ்துளை கிணறு பைப் லைன் அமைக்கும் பணிகளும், பொது நிதித் திட்டம் மூலம் ரூ.17.40 இலட்சம் மதிப்பீட்டில் பைப் லைன் விஸ்தரிப்பு, ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிகளும், இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிதியின் மூலம் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் திறந்தவெளி கிணறு சீரமைக்கும் பணிகளும், தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.59.10 இலட்சம் மதிப்பீட்டில் கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால் ஆகியவற்றை ஆழப்படுத்துதல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளும் என மொத்தம் ரூ.1.52 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய வளர்ச்சித் திட்டத்திற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இன்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் வாயிலாக ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் காடையாம்பட்டி முதல்நிலைப் பேரூராட்சிப் பகுதிகளில் ரூ.3.14 கோடி மதிப்பீட்டிலான 17 புதிய திட்டப்பணிகளுக்கு இன்றையதினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் நல்லமுறையில் பயன்படுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உங்களது ஆதரவினை தொடர்ந்து வழங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, இ.ஆ.ப., காடையாம்பட்டி பேரூராட்சித்தலைவர் ரா.குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உமா சங்கர், தனபால், காடையாம்பட்டி செயல் அலுவலர் திருமதி ந.பொற்கொடி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பட்டுக்கோட்டை தொகுதி

# சிரமேல்குடி ஊராட்சியில் 110 கி.வோ.துணை மின்நிலையம் அமைத்திடுக!

## பேரவையில் கா.அண்ணாதுரை கோரிக்கை!

சென்னை, ஏப். 1 -

சட்டப்பேரவையில் பட்டுக்கோட்டை தொகுதி, சிரமேல்குடி ஊராட்சியில் 110 கே.வோ.துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று தொகுதி உறுப்பினர் கா.அண்ணாதுரை கோரிக்கை விடுத்தார்.

இது குறித்த விவாதம் வருமாறு:



**கா.அண்ணாதுரை:** பட்டுக்கோட்டை தொகுதி, சிரமேல்குடி ஊராட்சியில் 110 KV துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் செந்தில் பாலாஜி:** பட்டுக்கோட்டை தொகுதி, சிரமேல்குடி ஊராட்சிக்கு மதுக்கூர் 110 கிலோ வோல்ட் துணைமின்நிலையத்திலிருந்து தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, சிரமேல்குடியில் புதிய துணை மின் நிலை யம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை

**கா.அண்ணாதுரை:** அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டி ருக்கிற அந்த துணை மின் நிலையப் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடுகிறேன். அமைச் சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்திற்குப் பதி லாக அதே பகுதியிலுள்ள வேறு இடத்திலே அமைப்பதற்கான வாய்ப்பி ருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதே பகுதியில் இருக்கக்கூடிய கருப்பூர், கீழக்குறிச்சி, ஒலையகுன்னம், ஆவிக்கோட்டை, புலவஞ்சி, வடக்கு மதுக்கூர், மோகூர், சிராங்குடி மற்றும் அண்டமி ஆகிய ஊராட் சிகளுக்கு ஒரத்தநாடு வட்டம், வடசேரியில் உள்ள 110 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்படு கிறது.

இந்தப் பகுதி கடைமடைப் பகுதி என்பதா லும், குறைந்த மின்ன ழுத்தம் காரணமாக, விவசாயிகள், பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளா கிறார்கள். எனவே, மேற்கண்ட கருப்பூர் கிராமத்தில் சர்வே எண் 166 ன்கீழ் 10ல்,

0.87 ஹெக்டேர் நிலம் தரிசு நிலமாக உள்ளது. கருப்பூர் ஊராட்சி மன்ற மும் அந்த இடத்தில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கலாம் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு முன்வருவார்களா

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் 16 புதிய துணை மின் நிலையங்க ளும், 1 துணை மின் நிலை யத்தினை தரமுயர்த்தக்கூடிய பணிகளுக்கு முதல மைச்சர் அவர்கள் அனு மதிகளை வழங்கியிருக்கி றார்கள். அந்த 16 துணை மின் நிலையங்களில், பட்டுக்கோட்டை தொகுதியில் 2 புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான அனுமதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடுதலாக, கருப்பூர் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக் கிறார்கள்.

துறையினுடைய அதிகாரிகளுக்கு இதுகுறித்து எடுத்துச் சொல்லி, அந்தப் பகுதியில் ஆய்வு செய்யப் படும் உறுப்பினர் அவர்க ளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கா. அண்ணாதுரை:** அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக் கோட்டை ஒன்றியம், இராஜாமடம் மற்றும் ஏரிப்புரக்கரை கிராமங்கள் மீனவக் கிராமங்களாகும். இந்தப் பகுதியில் நிலவும் குறைந்த மின்னழுத்தம் காரணமாக அருகிலுள்ள கொள்ளுக்காடு கிரா மத்தில் 33 K.V. துணை மின் நிலையம் அமைப்ப தற்கான இடம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், அந்த இடத்திற்கு அருகில் சமையல் எரிவாயு கிடங்கு இருப்பதால் அந்த இடம் கைவிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தப் பகுதியிலுள்ள அரசுப் பொறியியல் கல்லூரி வளாகத்தில், இந்தத் துணை மின் நிலையம் அமைய வாய்ப்புள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்திலே துணை மின் நிலையத்தை அமைப்ப தற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**வி. செந்தில் பாலாஜி:** பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியல் சீரான மின் விநியோகம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக 538 புதிய மின்மாற்றிகள் அமைக் கப்பட்டு, இப்போது தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வரு கின்றது. உறுப்பினர் அவர்கள் கொள்ளுக்காடு கிராமத்தில் ஏற்கெனவே இடம் தேர்வு செய்யப் பட்டு, அந்த இடத்திற்கு அருகில் அமைக்க முடியாது என்று கூறியிருக்கின் றார்கள். புதிய இடமாக கல்லூரி அமைந்திருக்கின்ற இடத்தைச் சொல்லியி ருக்கின்றார்கள். துறையி னுடைய அதிகாரிகளிடத்தில் சொல்லி, அது மற்றொரு துறையினுடைய இடமாக இருப்பதால், அந்த இடம் தேர்வு செய் யப்பட்டு, வகை மாற்றம் செய்யப்பட்டால் முன்னுரிமை அடிப்படையில் உறுப்பினர் அவர்களு டைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என் பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித் துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை கண்டித்து பள்ளிப்பட்டு அஞ்சல் நிலையம் அருகில் ஒன்றிய செயலாளர் சி.ஜே. சீனிவாசன், தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் பெருந்திரளாக பெண்கள் கண்டன முழக்கமிட்டனர். இதில் சி. ஜே.செந்தில்குமார், திருமலை லோகநாதன், பி.ரவீந்திரநாத், எஸ்.மணிமேகலை, மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### தொகுதி மறு வரையறை குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்

# இந்தியா முழுவதும் பா.ஜ.க. அல்லாத கட்சிகளை ஒருங்கிணைத்து போராடி வருகிறார்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேட்டி!

திருவள்ளூர் ஏப் 01

ஒன்றிய பா.ஜ.க. அரசு தொகுதி மறுவரையறை செய்வதை கல்வி நிதி 100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி ஒதுக்காமல் தமிழ்நாட்டில் புறக்கணித்து வருகிறது என்று குறித்து சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் செய்தியாளர்களை சந்தித்த போது தெரிவித்தார்.

இதுகுறித்து அமைச்சர் சா.மு.நாசர் அளித்த பேட்டி வருமாறு:

பன்முக தன்மை கொண்ட நாடாக இந்தியா இருந்து வருகிறது.இதனை சிதைக்கும் வகையில் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது. ஏதாச்சதிகாரம் கொண்ட ஒன்றிய அரசு ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் செயலை செய்கிறது. மேலும் மோடி அரசு தென்னிந்திய மாநிலங்களை வஞ்சித்து,இந்தி போசாத மாநிலங்களை இரண்டாம் தர மக்கள் போன்று நடத்துகிறது.

தொடர்ந்து பேசிய அமைச்சர் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமிழ்நாடு எம்.பி களை நாகரீகமற்றவர்கள் என கூறியது தரம் கெட்ட செயல் என சாடினார்.



ஒன்றிய அரசுக்கு அதிக நிதி வழங்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது ஆனால் நிதி ஒதுக்கீட்டின்போது தமிழக மக்களே வஞ்சிக்கும் விதமாக கல்வி நிதி 100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி ஒதுக்காமல் ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை புறக்கணித்து வருகிறது அதே நேரம் தனது கூட்டணி ஆட்சியை காப்பாற்றிக் கொள்ள ஆந்திரா பீகார் ஆகிய மாநிலங்களுக்கு மட்டும் கூடுதல் நிதியை பாஜக அரசு அளித்து வருகிறது

தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய GST ஈவு தொகையை தரவில்லை,100 நாள் வேலை நிதி 4000 கோடியை தரவில்லை. தமிழ் மொழிக்கு எந்த அளவுக்கு குந்தகம் விளைவிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு குந்தகம் விளைவிகின்றனர் .

இந்தி கற்றுக்கொள்ள கூறி வற்புறுத்துகின்றனர். நாடாளு மன்றத்தில் நம்முடைய உரிமை குரலை ஒலிக்க செய்ய முடியாத சூழலை தொகுதி மறு வரையறை உருவாக்கும் என கூறியவர்.40க்கு 40 என முழுவதும் வெற்றி பெற்று இருக்கும் சூழலில் கூட நம்மை பேச விடாமல் வாய்பளிக்காமல் இருந்து வருகின்றனர்.தொகுதி மறுவரையறை விவகாரத்தில் ஒன்றிய அரசு மௌனம் காக்கின்றனர் .பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்சாவும் சப்பை கட்டு கட்டுகின்றனர். உறுதியாக எதையும் கூறாமல் இருந்து வருகின்றனர். நாடாளுமன்றம் தொகுதி குறைப்பு என்பது வெறும் எண்ணிக்கை மட்டுமல்ல அரசியல் பலம் தரும் ,உரிமை மட்டுமல்ல எதிர்காலத்தை வீழ்ச்சி பாதையில் கொண்டு செல்லும். குறைவான அரசியல் பிரதிநிதிகள் இருந்தால் நியாமன கொள்கைகளை பாதுகாப்பதிலும்,மக்கள் தேவைகளுக்கு நிதியை கேட்டு பெறுவதிலும் கடுமையான சவால் உருவாகும். இதனை முறியடிக்க தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி உள்ளார்.இந்த விவகாரத்தில் திராவிட மாடல் அரசு போராடி வெற்றி பெரும் என்பதில் மாற்று கருத்து இல்லை

குறிப்பாக ; தொகுதி மறு வரையறை என்ற பெயரில் ஒன்றிய பாஜக அரசு மக்கள் தொகை குறைத்து தென் மாநிலங்களில் வஞ்சிக்கும் விதமாக தென் மாநிலங்களில் தொகுதி களை குறைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது இதனை தடுக்க விதமாக தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் இந்தியா முழுவதும் பாஜக அல்லாத கட்சிகளை ஒருங்கிணைத்து போராடிக் கொண்டு வருகிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

### அந்தியூர் தொகுதியில் – வரட்டுப்பள்ளம் அணை, கெட்டி சமுத்திரம் ஏரி –

# மேட்டுப்பாளையம் ஏரியை அழகுபடுத்தி படகுகள் இயக்கிட வேண்டும்!

## சட்டப்பேரவையில் – அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம் கோரிக்கை!

சென்னை, ஏப். 1-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு: -

**ஏ.ஜி. வெங்கடாசலம்:** அந்தியூர் தொகுதி, வரட்டுப்பள்ளம் அணை, கெட்டி சமுத்திரம் ஏரி, அந்தியூர் ஏரி மற்றும் மேட்டுப்பாளையம் ஏரி ஆகியவற்றை அழகுபடுத்தி படகுகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?


**அமைச்சர் இரா. இராஜேந்திரன்:** உறுப்பினர் அவர்கள் வரட்டுப்பள்ளம் அணை, கெட்டி சமுத்திரம் ஏரி, ந. மேட்டுப்பாளையம், ஆனந்த சாகரம் ஏரி ஆகியவற்றை அழகுபடுத்தி படகுகள் இயக்க ஆவன செய்யப்படுமா என்று கேட்டுள்ளார்கள். அந்தியூர் ஏரியில் படகு குழாம் அமைக்கப்பட்டு 26.11.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கிவைக்கப்பட்டது. அந்தியூர் ஏரிக்கு அருகிலே 12 கி.மீ. தொலைவிலே வரட்டுப்பள்ளம் அணையும், அதேபோல 4 கி.மீ. தொலைவிலே கெட்டிசமுத்திரம் ஏரியும் அமைந்துள்ளது. இந்த ஏரிகளில் நீர்வரத்து நிலையற்றதாக உள்ளதால் படகு குழாம்கள் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**ஏ.ஜி. வெங்கடாசலம்:** அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்கு நிதிநிலை அறிக்கையிலே கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக ரூ. 374 கோடியை வாரி வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க ஆட்சியை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்ற தமிழக மக்களின் மாமன்னர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுடைய செல்லப்பிள்ளையாக விளங்குகின்ற எங்களின் இளவரசன் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும், ஈரோட்டின் சிற்பி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களுக்கும் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக இதயமார்ந்த நன்றி மலர்களை அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்.

சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பதிலுரையில் குறிப்பிட்டபடி அந்தியூர் ஏரியில், படகு குழாம் அமைத்திட ரூபாய் 50 இலட்சத்தை தாயுள்ளம் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, 26.11.2024-ஆம் தேதி காணொளி மூலம் திறந்து வைத்தார்கள். ஆனால், மக்களும், குழந்தைகளும் ஆவலுடன் எதிர்ப்பார்க்கும் இயந்திர படகுகள் இன்னும் இயக்கப்படவில்லை. படகுகள் இயக்குவதற்கு போதிய தண்ணீர் வசதி உள்ளது என பொதுப் பணித் துறை அதிகாரிகளும் சொல்லியிருக்கிறார்கள். படகுகள் இயக்குவதற்கு சாய்தளம்ramp சிறிது நீட்டித்து செய்திட வேண்டிய நிலை உள்ளது. பர்கூர் மலைப்பகுதியை ஒட்டியுள்ளது.

அந்த ramp அமைப்பதற்குக்கூட நானே என்னுடைய பொறுப்பிலே, அந்தச் செலவினை செய்து தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அதனால் விரைவில் ramp அமைத்து, அந்தியூர் ஏரியிலே படகு குழாம் அமைத்திட வேண்டும். அதேபோன்று வரட்டுப்பள்ளம் அணை மலைப் பகுதியினை ஒட்டியுள்ள அணை. காட்டாற்று வெள்ளம் வரும் போது, அணைக்கு தண்ணீர் பெருமளவில் வரும். அது நிரம்பியதும், அதைத் தொடர்ந்து இருக்கின்ற கெட்டி சமுத்திரம் ஏரிக்கும் தண்ணீர் வரும்.

**அமைச்சர் இரா. இராஜேந்திரன்:** அந்தியூர் ஏரியிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய நிதியிலிருந்து நிதி வழங்குவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தியூர் ஏரியிலே தொடர்ந்து படகு குழாம் இயக்குவதற்கான ஏற்பாடு செய்ய ஆவன செய்யப்படும். அதே நேரத்திலே வரட்டுப்பள்ளம் அணையிலே படகு குழாம் அமைக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அதில் நீர்நிலையென்பது, நீர் எப்பொழுதும் ஆண்டு முழுவதும் இருக்கிற சூழ்நிலை இல்லாத நிலையிருக்கிறது. எனவே,



ஆண்டு முழுவதும் நீர் இருக்குமென்றால் அதற்கான வாய்ப்பு இருக்கிறது.

**ஏ.ஜி. வெங்கடாசலம்:** அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, T.N. பாளையம் ஒன்றியம், சஞ்சீவராயன் குளம் என்பது மலைப் பகுதியை ஒட்டியுள்ள குளமாகும். இக்குளத்தையொட்டி சஞ்சீவராயன் திருக்கோயிலில் பிரம்மாண்டமான 50 அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சிலை உள்ளது. அங்கு தினந்தோறும் அதிகமான மக்கள் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள்; ஆயிரக்கணக்கான மக்கள் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே அந்தப் பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்றி, அங்கே ஒரு படகு குழாம் அமைத்திட வேண்டும். அதேபோன்று பர்கூர் மலைப்பகுதியிலுள்ள தாமரைக்கரை என்னும் ஊரில் தாமரைக் குளம் உள்ளது. அக்குளத்தில் தாமரை பூத்துக் குலுங்குவது, கண்கொல்லா காட்சியாக இருக்கும். இக்குளத்தை அழகுப்படுத்திடவும், வருகின்ற சுற்றுலாப் பயணிகளை மகிழ வைத்திடவும், ஏரியினை சுற்றி நடைபாதையும், மின்விளக்குடன்கூடிய பூங்காவும் அமைத்து தந்திட வேண்டும்.

**அமைச்சர் இரா. இராஜேந்திரன்:** T.N. பாளையம், சஞ்சீவராயன் குளம் மற்றும் பர்கூர், தாமரைக்கரை குளம் ஆகிய இடங்களிலே பூங்காக்கள், நடைபாதை வசதி மற்றும் படகு சவாரி அமைப்பதற்கு ஆவன செய்ய முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். வருகின்ற நிதியாண்டிலே, நிதி நிலைமைக்கேற்ப அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### பேராவூரணி தொகுதியில்

# அக்னி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும்!

## சட்டப்பேரவையில் - என்.அசோக்குமார் கோரிக்கை!

சென்னை, ஏப்.1 -

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பேசிய பேராவூரணி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார் "அக்னி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும்" என கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு: -



**என்.அசோக்குமார் :** பேராவூரணி சட்டமன்றத் தொகுதியில் அமைந்திருக்கிற அக்கறை ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்ட வேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன். ஏனென்றால், வருடா, வருடம் 1 இலட்சம் ரூபாய், 10 இலட்சம் ரூபாய் என்றளவில் செலவு செய்து, மண்ணால் தடுப்பணைக் கட்டுவதால், வருடா, வருடம் 20 கிராமங்களுக்கு தண்ணீர் வசதியும், விவசாயத்திற்கும் பயன்படுகிறது. அக்னியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட வேண்டும். நன்றி

**அமைச்சர் துரைமுருகன்:** என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், இந்த ஆண்டுகூட அவர்கள் பகுதிக்கு ஒரு தடுப்பணை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, 17 வது வட்டம் தியாகி விஸ்வநாததாஸ் நகர் பகுதியில், பொதுமக்களுக்கு காலை அறுசுவை அசைவ உணவு மற்றும் பெண்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டது. 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் சி. மூர்த்தி, சி.பாலாஜி, கே. சண்முக பிரியன், இ. சுதர்சன், ஜி. பூபாலன், டி.திவாகர், வக்கீல் எம். என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்